


சென்னை, காமராசர் சாலையில் நேற்று முன்தினம் (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆகியோர் தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கரகாட்டம், காவடியாட்டம் போன்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள்.இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,அமைச்சர் பெருமக்கள், சட்டப்போவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, காமராசர் சாலையில் நேற்று முன்தினம் (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மைவிருது,சிறந்தகாவல்நிலையத்திற்கானமுதலமைச்சரின்கோப்பைகள்ஆகியபதக்கங்களையும்,கோப்பைகளையும் பெற்றவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

இந்தியாவின் 76வது குடியரசு நாளில்

# அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

சென்னை, ஜன. 28-

இந்தியாவின் 76வது குடியரசு நாளில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம் என்று முதல்வர்மு.க.ஸ்டாலின்அவர்கள்சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் 76ஆவது குடியரசு நாளையொட்டிதமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இந்தியாவின் 76-ஆவது குடியரசு நாளில், அனைவருக்கும் நீதி, சமத்துவம், மாண்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம்!**

**முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, கனிவான இந்தியாவைக் கட்டமைக்க வேண்டிய நம் கூட்டுக் கடமையினை இந்நாள் நமக்கு நினைவூட்டட்டும்.**

**அனைவருக்கும் நம்பிக்கையும் நல்நோக்கமும் நிறைந்த குடியரசு நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் - கவிச்சுடர் கவிதைப்பித்தன் பங்கேற்பு!

அரியலூர், ஜன.28

அரியலூரில் பேரறிஞர் அண்ணாசிலை அருகில் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் இரா. இரமேஷ் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் சீ. சுரேஷ்,ரெ.வெங்கட்ராமன், மு.தமிழழகி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர்கள் செங்கை.சந்தானம், சன். சங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம். பி. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு. கணேசன், சி. சந்திர சேகரன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு. ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர். எம். பொய்யாமொழி, ஆர். எம். அன்பழகன், இரா பாலு வி. எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா. முருகேசன்,வெ.கொ. கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபால கிருஷ்ணன், ஒன்றிய கழக செயலாளர் பூ. செல்வராஜ், இரா. மணிமாறன், மா. அன்பழகன்,ரெங்க. முருகன், கோ. அறிவழகன், ஆர். கலிய பெருமாள், வி. எழில்மாறன். ப. தனவேல், வரதராஜன் பேட்டை பேரூர் செயலாளர் அல்போன்ஸ்.நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், பேரூராட்சி தலைவர்கள் மலர்விழி ரஞ்சித் குமார், மார்க்ரட் அல் போன்ஸ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் தெய்வ.இளையராஜா, என்.ஆர்.ராமதுரை, தங்க. ராமகிருஷ்ணன், அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், எம். ஜி.ராஜேந்திரன், ஆதி. இளங்கோவன், மீனா சாமிநாதன், ரவிக்குமார் இரா.குலோத்துங்கன், மருத்துவர் இளஞ்செழியன், வை.முருகானந்தம், க.கருப்புசாமி, க. செல்வ ராஜ், ம. ஜெயக்குமார், பொன். செல்வம், க. அருண் ராஜா, க. இளங் கோவன் மருத்துவர் சஞ் சய் குமார், ஜோ. வின் சென்ட் ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்த பகலவன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், ஆகியோர் கலந்து கொண்டனர் இறுதியாக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ. பிரபாகரன் நன்றி கூறினார் முன்னதாக மொழிப் போர்த் தியாகிகள் வாரணவாசி கணேசன் உள்ளே குடி தங்கராஜ் முகமது அனிபா ராம லிங்கம் ஆகியோர்களுக்கு நிதி உதவி அளித்து கழக வேஷ்டி அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.





திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தென்னூர் உழவர் சந்தை அருகே நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், பழனியாண்டி, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ஆனந்த், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆனந்த், தலைமைக் கழகப் பேச்சாளர் குடியாத்தம் கோட் டீஸ்வரன், மாவட்ட துணை செயலாளர்கள் முத்து செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள், சேர்மன் துரைராஜ், காஜாமலை, விஜய், குடமுருட்டி சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இன்று (ஜன. 28) நடைபெறுகிறது!

# நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (28.1.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் - 'மாதா மாளிகை'யில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் தலைமையில் நடை பெறுகிறது.

மாவட்டச் செயாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் - நெல்லை மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் மற்றும் பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : பிப். 6, 7 ஆகிய நாட்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்துக்கு வருகை!**

**மற்றும் - கழக ஆக்கப் பணிகள்.**

அமைச்சர் **கே.என்.நேரு**
**தலைமைக் கழக முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**




அரியலூரில் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் பேரறிஞர் அண்ணாசிலை அருகே நடைபெற்றது. கூட்டத்தில் கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர்கள் சந்தானம், சன்.சங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

திருப்பூர் மாநகராட்சி, வேலன் ஹோட்டல் வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பின்னல் புக் டிரஸ்ட் இணைந்து நடத்தும் 21வது திருப்பூர் புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் அமைச்சர்கள், மு.பெ. சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து, புத்தக அரங்குகளை பார்வையிட்டனர். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.